**நிலையான வைப்பு**

18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப்பிரஜை மற்றும் செல்லுபடியாகும் அடையாள ஆவணத்தை(தேசிய அடையாள அட்டை,ஓட்டுநர் உரிமம் அல்லது கடவுச்சீட்டு) வைத்திருக்கும் எவரும் நிலையான வைப்பை வைப்பு செய்ய முடியும்.

- குறைந்த வைப்புத்தொகை ரூபா 5,000
- நிலையான வைப்பு தனியாகவோ அல்லது மூன்று வைப்புதாரர்கள் வரை இணைந்தோ வைப்பு செய்ய முடியும்.
- தனி,காப்ரேட்(கம்பனிகள்),சங்கங்கள்,அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் வைப்புகள் ஏற்றுகடகொள்ளப்படும்.
- வைப்புகள் ரொக்கம்,நேரடி பரிமாற்றங்கள் அல்லது சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி என வரையப்பட்டு குறுக்குக்கோடிடப்பட்ட(கணக்கு கட்டனம் மட்டும்) காசோலை ஆகிய வைப்பு முறைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பத்தில் பரிந்துரைக்கப்பட்ட பணம் பெறுபவருக்கு மாதாந்தம் மற்றும் முதிர்ச்சியின் போது வட்டி வழங்கப்படலாம்
- வைப்புகள் முதிர்ச்சியடைவதற்கு 7-14 நாட்களுக்கு முன்பு புதுப்பித்தல் அறிவிப்பு பெறப்படும். வைப்பில் ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்ள முதிர்ச்சி திகதியில் அல்லது அதற்கு முன் அறிவுறுதல்கள் மற்றும் கையொப்பத்துடன் புதுப்பித்தல் கடிதத்தை அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் முந்தைய வழிமுறையின் வைப்புத்தொகை புதுப்பிக்கப்படும்.
- எந்தவொரு வைப்பு மீளப்பெறுதலின் போதும் வைப்புச்சான்றிதழ் கையளிக்கப்பட வேண்டும்.
- நிலையான வைப்பில் குறிப்பிட்ட காலங்களுக்கு முன்கூடியே திருப்பப்பெறமுடியாது. இருப்பினும் வைப்புகள் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி முதிர்வுக்கு முன் திருப்பப்பெறப்பட்டால் வைப்புத்தொகையின் காலத்தை பொறுத்து வட்டி குறைக்கப்படும். வைப்பாளருக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட அதிகபடியான வட்டி நிறுவனத்தால் திருப்பப்பெறப்படும். எனவே வைப்பிலடப்பட்ட மூலதனத்திலிருந்து மேற்படி கூடுதல் தொகையைக் கழிக்க நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

எந்த நேரத்திலும் முன்கூடியே திருப்பப்பெறுதலுக்கான விதிக்கப்படும் அபராதம் அல்லது சலுகை விகிதத்தை மாற்றுவதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

0 - 29 நாட்கள் - வட்டி இல்லை
30- 179 நாட்கள் - 2.5%
180 நாட்களுக்கு மேல் - 3.5%

*ஒரு மாதத்திற்கு வைக்கப்படும் வைப்புத்தொகைகள் முன்கூடியே மீளப்பெறப்பட்டால் வட்டி செலுத்தப்படமாட்டாது.*

- பணமாகவோ கணக்கு செலுத்துபவரின் காசோலையாகவோ அல்லது கூடுதல் கட்டணம் ஏதுமின்றி நியமிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- முதிர்வு காலத்தில் எந்த அறிவித்தலும் வரவில்லை என்றால் நிலையான வைப்பானது தானகவே அதே காலத்திற்கு நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தில் புதுப்பிக்கப்படும்.

- நிலையான வைப்புதாரர்கள் தங்களது நிலையான வைப்பு முதலின் 75% வரை (நிலையான வைப்பின் வட்டி மாதாந்தம் செலுத்தப்பட்டால்) அல்லது நிலையான வைப்பு முதலின் 80% வரை (நிலையான வைப்பின் வட்டி முதிர்வின் போது செலுத்தப்பட்டால்) பெற்றுக் கொள்ள முடியும். ஆத்தகைய மீளப்பெறல்கள் நிலையான வைப்பிற்குப் பொறுந்தக்கூடிய வட்டி வீதத்தை விட 5% அனைத்தையும் உள்ளடக்கிய சேவைக்கட்டணத்திற்கு உட்பட்டது. இந்த நிதி வசதி நிறுவனத்தின் விருப்பத்தின் பேரில் வழங்கப்படும் மேலும்

எந்த நேரத்திலும் தற்காலிக மீளப்பெறலை மேற்கொள்ளும் போது விதிக்கப்படும் சேவைக்கட்டணத்தை மாற்றுவதற்கான உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

இந்த வசதிக்கான காப்புரிமையின் கீழ் வைப்புச் சான்றிதழ் எங்களிடம் இருக்கும். சேவைகளுக்கான தகவல் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டவை. எனவே சமீபத்தய தகவல் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வைப்புத்துறை அல்லது அருகில் உள்ள கிளையைத் தொடர்புகொள்ளவும்.

- தகுதியான வைப்புகள் ஒரு வைப்பாளருக்கு அதிகபட்ச தொகை ரூபா 1,100,000 வரை இழப்பீட்டுக் காப்புறுதிக்காக நாணய சபையால் செயல்படுத்தப்படும் இலங்கை வைப்புத்தொகை காப்புறுதி திட்டத்தில் காப்பீடு செய்யப்படுகின்றன்.
- 2011ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின் படி அதிகபட்சமாக 10 வருடங்கள் பரிவர்த்தனை அல்லது கடிதப்பரிமாற்றங்கள் இல்லாத வைப்புகள் செயலற்றதாக இனங்கானப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.
- நிலையான வைப்பைத்திறக்க பின்வரும் ஆவணங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு அருகிலுள்ள கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஆவணங்களை இங்கே பதிவிறக்கம் செய்யலாம்.

  - தனிப்பட்ட வைப்புகள்

    - நிலையான வைப்புப்படிவம்
    - வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC)
    - வெளிநாட்டுக் கணக்கு வரி இணக்கச்சட்ட படிவம் (FATCA)
    - தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு/ ஓட்டுநர் உரிம பிரதி.
    - முகவரி உருதிப்படுத்தல் ஆவணப்பிரதி.
    - பின் உறித்து அடையாள ஆவணங்கள்

  - கார்ப்ரேட் அல்லது பிற நிறுவனங்கள்
    - நிலையான வைப்புப்படிவம்
    - வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC) மற்றும் தேவையாள ஆவணங்கள்
    - வெளிநாட்டுக் கணக்கு வரி இணக்கச்சட்ட படிவம் (FATCA)
    - வியாபாரப் பதிவு / ஒருங்கிணைப்புச் சான்றிதழ்
    - சங்கத்தின் கடமைகள் மற்றும் பொறுப்பு உள்ளடங்கள் ஆவணம் (AOA)
    - தீர்மான குழு
    - நன்மைபயக்கும் உரிமையாளரின் அறிவிப்பு
    - நிர்வாகக்குழு அங்கத்தவர்களின் வாடிக்கையாளர் விபரப்படிவம் (KYC) மற்றும் அடையாள ஆவணங்கள்
    - அங்கிகரிக்கப்பட்டவர்களின் கையொப்பதாரர்களின் கடிதம்.
    - அங்கிகரிக்கப்பட்டவர்களின் கையொப்பதாரர்களின் அடையாள ஆவணங்கள்
    - படிவம் 20
    - படிவம் 13 (தேவைப்பட்டால்)
    - முகவரி உருதிப்படுத்தல் ஆவணங்கள் (பட்டியல் கொடுப்பனவு மசோதா அல்லது நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கிக்கணக்குக் கூற்று).

புகார்கள் அல்லது பரிந்துரைகளை இங்கே தெரிவிக்கலாம்
புகார்கள் கையாளுதல் கொள்கைகளை தேவைப்பட்டால் இங்கே பதிவிரக்கம் செய்யலாம்.